**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S.116/2024**
**Examination of - PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | நாகராஜீ |
| Father Name | : | கோவிந்தன் |
| Age | : | 51 |
| Place | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21.08.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கருமாராப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் நெல் விற்பனை செய்து வியாபாராம் செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 15.08.2020 அன்று பிரதிவாதி வெங்கடேசன் ரூ.50,000/-ஐ பெற்றுக்கொண்டு எனக்கு எழுதி கொடுத்த கடன் உறுதி சீட்டு அசல் **வசாஆ1** ஆக தாக்கல் செய்கிறேன். கடந்த 26.07.2022ம் தேதி மேற்படி எனக்கு கொடுக்க வேண்டிய மேற்படி ரூ.50,000/-ஐ திருப்பி கேட்டு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் அந்த அலுவலக நகல் **வசாஆ2** ஆகும். மேற்படி அறிவிப்பு மேற்படி பிரதிவாதி அறிவிப்பில் கண்ட முகவரியில் இல்லை என்று திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக உறை **வசாஆ3** ஆகும். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க பிராத்திக்க தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை எனவே இந்நீதிமன்றம் தன்னிச்சையாக சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக பிரதிவாதிக்கு அவகாசம் அளித்து வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்